ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2350/18 – 2023 සැප්තැම්බර් මස 19 වැනි අඟහරුවාදා – 2023.09.19
2350/18 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2023 ஆம் ஆண்டின் 80 ஆம் இலக்கக் கட்டளை**

எனது இல. : 4-3/18/2021/WS/161.
பி. செ. குறிப்பு இல.: KDS/TUM/4/1/1/12.

*2023.05.20 ஆந் திகதிய 2332/ 55 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 2A பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் 2023 ஆம் ஆண்டின் 80 ஆம் இலக்க கட்டளையில் பிழையாக வெளியிடப்பட்டுள்ளது. எனவே பொருள் கோடல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 18 இன் விதிகளின்படி 2023 ஆம் ஆண்டின் 80 ஆம் இலக்க கட்டளையினை இதன் மூலம் இரத்துச் செய்கிறேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல.1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 29.*

EOG 09 - 0167

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2023 ஆம் ஆண்டின் 165 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/ 18/ 2021/ WS/ 161.
பி. செ. குறிப்பு இல.: KDS/TUM/4/1/1/12.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணிகள் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட சேவக உரித்திற்கு உட்படுத்தப்படுவதாக இத்தால் கட்டளையிடு கின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல.1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 29.*

1A – G 40358 – 44 (2023/09)
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### அட்டவணை

**1. காணியின் விபரம்**: மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் தும்பனே பிரதேச செலாளர் பிரிவில் உடபலாத கிழக்கு கோறளே சிறு பிரிவில் கல்லெனவத்தை (364) கிராம அலுவலர் பிரிவில் கல்லெனவத்தை குடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.12.21 ஆந் திகதிய, Maha/TMP/2021/673 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லை:

**2. சேவகத்தின் விபரம்**: கண்டி வடக்கு - பதாதும்பர ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தின் கல்லன்வத்தை சேவை நீர்த்தேக்கம் வரையில் கடத்தும்குழாய்கள்அமைப்பதற்கும், அதிலிருந்து விநியோக குழாய்களை அமைப்பதற்காக காணியின் ஒரு பகுதி உரிமையை எடுத்துக்கொள்ளல்.

**01. துண்டு 'A' - கல்லெனவத்தை குடியிருப்பு - விஸ்தீரணம்: 0.0112 ஹெக்டயார்**

வடக்கு : படிக்கட்டு மற்றும் பிரதேச சபை வீதி; கிழக்கு: பிரதேச சபை வீதி மற்றும் எம்.ஜீ.லீலாவதி உரமைகோரும் கல்லென வத்தை குடியிருப்பு; தெற்கு : எம்.ஜீ.லீலாவதி உரிமைகோரும் கல்லெனவத்தை குடியிருப்பு மற்றும் பிரதேச சபை வீதி; மேற்கு : பிரதேச சபை வீதி மற்றும் படிக்கட்டு.

EOG 09 - 0168

---

திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

**2023 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கக் கட்டளை**

எனது இல. : 4-3/18/2020/WS/96.
பி. செ. குறிப்பு இல.: KDS/PHT/4/6/1/13.

2023.05.08 ஆந் திகதிய 2331/07 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1A பக்கத்தில் மும்மொழியில் பிரசுரிக்கப்பட்ட 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் 2023 ஆம் ஆண்டில் 49 ஆம் இலக்க கட்டளையில்பிழையாகவெளியிடப்பட்டுள்ளது எனவே பொருள் கோடல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 18 இன் விதிகளின்படி 2023 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க கட்டளையினை இதன் மூலம் இரத்துச் செய்கிறேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல.1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 31.

EOG 09 - 0169

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

**2023 ஆம் ஆண்டின் 178 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/ 18/ 2020/ WS/ 96.
பி. செ. குறிப்பு இல.: KDS/PHT/4/6/1/13.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணிகள் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட சேவக உரித்திற்கு உட்படுத்தப்படுவதாக இத்தால் கட்டளையிடு கின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல.1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 31.

### அட்டவணை

**1. காணியின் விபரம்**: மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் பாதஹேவாஹெட்ட பிரதேச செலாளர் பிரிவில் புட்டாவத்த வடக்கு (984) கிராம அலுவலர் பிரிவில் கந்தாகுல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.02.02 ஆந் திகதிய Maha/PTH/2020/679 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

**2. சேவகத்தின் விபரம்**: குண்டசாலை – ஹாரகம நீர் வழங்கல் திட்டத்தின் தலாதுஓயா சேவை நீர்த்தேக்கம், நீர் விநியோக நிலையத்திற்கு செல்லும் வீதியினை அமைப்பதற்கு காணியின் ஒரு பகுதியின் உரிமையை எடுத்துக்கொள்ளல்.

**01. துண்டு 'A' - நாரங்கடுவ வத்தை அல்லது காலியப் பெருமால் வத்தை - விஸ்தீரணம் : 0.0548 ஹெக்டயார்**

வடக்கு : பி.ஜி.வர்ணகுலசூரிய மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் நாரங்கடுவ வத்தை அல்லது காலியப்பெருமால் வத்தை மற்றும் வீதி (வீஅஅ); கிழக்கு: வீதி (வீஅஅ) மற்றும் ஜி.எம். எச்.வி. அஜந்தா லக்ஷ்மன் மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் நாரங்கடுவ வத்தை அல்லது காலியப்பெருமால் வத்தை; தெற்கு: ஜி.எம்.எச்.வி. அஜந்தா லக்ஷ்மன் மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் நாரங்கடுவ வத்தை அல்லது காலியப்பெருமால்

வத்தை, வீதி மற்றும் டி.ஏ.பெரேரா உரிமை கோரும் நாரங்கடுவ வத்தை அல்லது காலியப்பெருமால் வத்தை; மேற்கு : பி.ஜி.வர்ணகுலசூரிய மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் நாரங்கடுவ வத்தை அல்லது காலியப்பெருமால் வத்தை.

*02.* **துண்டு 'B' - நாரங்கடுவ வத்தை அல்லது காலியப் பெருமால் வத்தை - விஸ்தீரணம் : 0.0133 ஹெக்டயார்**

வடக்கு : பி.ஜி.வர்ணகுலசூரிய மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் நாரங்கடுவ வத்தை அல்லது காலியப்பெருமால் வத்தை மற்றும் வீதி; கிழக்கு: வீதி மற்றும் டி.ஏ.பெரேரா உரிமை கோரும் நாரங்கடுவ வத்தை அல்லது காலியப்பெருமால் வத்தை; தெற்கு : டி.ஏ.பெரேரா உரிமை கோரும் நாரங்கடுவ வத்தை அல்லது காலியப்பெருமால் வத்தை; மேற்கு : பி.ஜி.வர்ணகுலசூரிய மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் நாரங்கடுவ வத்தை அல்லது காலியப்பெருமால் வத்தை.

EOG 09 - 0170